**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - சிறுசேமிப்புத் துறை - கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு மு.அன்பரசு, மாவட்ட சேமிப்பு அலுவலர் பணியிடை மரணம் – வாரிசான திரு அ.முனீஸ்வரன் என்பவருக்கு 12.05.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவி - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நிதி (சிறுசேமிப்பு)த் துறை**

அரசாணை (நிலை) எண்: 316

நாள்: 30.10.2023
சோபகிருது, ஐப்பசி : 13
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டது :

1. ஆணையர், சிறுசேமிப்புத் துறை அவர்களின் செ.மு.ஆ எண். அ1/1665/2020, நாள். 05.05.2021
2. திரு அ.முனீஸ்வரன், பணியேற்பு அறிக்கை, நாள்.12.05.2021.
3. சிறுசேமிப்புத் துறை ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ1/1665/2020, நாள்.01.08.2023

*******

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஆணையர், சிறுசேமிப்புத் துறை அவர்களின் கருத்துருவில், இராமநாதபுரம் மாவட்ட சிறுசேமிப்புத் துறையில் மாவட்ட சேமிப்பு அலுவலராக பணியாற்றி பணியிடையில் மரணமடைந்த திரு மு.அன்பரசு என்பவரின் மூத்த மகன் திரு அ. முனீஸ்வரன் என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்வழி கருணை அடிப்படையில் சிறுசேமிப்புத் துறையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பணியேற்பு அறிக்கையின்படி 12.05.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிபுரிந்துவரும் நிலையில், தனியருக்கு அப்பதவியில் 12.05.2021 முதல் பணிவரன்முறை செய்து வழங்குமாறு ஆணையர், சிறுசேமிப்புத்துறை அவர்கள் கோரியுள்ளார்.

2. திரு அ.முனீஸ்வரன் 29.04.1999 அன்று பிறந்துள்ளார். அமைச்சுப் பணிக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியான 10-ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார். பணியமர்த்தப்பட்டுள்ள நாளில் 18 வயது நிறைவு செய்துள்ளார்.

3. தனியரின் கல்வி தகுதி, வயது, உரிய சான்றிதழ்கள் மற்றும் ஆணையர், சிறுசேமிப்புத் துறை அவர்களின் கருத்துரு ஆகியனவற்றை அரசு கவனமுடன் பரிசீலனை செய்த நிலையில், தனியர் திரு அ.முனீஸ்வரன், இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 12.05.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இதன்பொருட்டு தனியர் ஊதிய உயர்வு மற்றும் ஊதிய உயர்வு நிலுவைப் பயன்களை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

Scanned with OKEN Scanner

4. இவ்வாணை மனிதவள மேலாண்மைத் துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹ.கிருஷ்ணனுண்ணி
அரசு இணைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், சிறுசேமிப்புத் துறை,
நந்தனம், சென்னை-600 035. (அனைத்து அசல் சான்றிதழ்களுடன்)
திரு அ. முனீஸ்வரன், இளநிலை உதவியாளர், சிறுசேமிப்புத் துறை.
(ஆணையர், சிறுசேமிப்புத் துறை மூலமாக)

நகல்

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-09
இருப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
30/10/2023

Scanned with OKEN Scanner
Scanned with OKEN Scanner